# புராதன மற்றும் தற்கால இந்து ஆலயக்கட்டுமானங்களில் இசைசார் புலமைத்துவங்கள்

ஸ்ரீகந்தராசா மதுராங்கி[1]

**ஆய்வுச்சுருக்கம்:**

*இறைவனே மெய்ப்பொருள் என்றுணர்ந்து இறைவனுடன் ஒன்றறக் கலக்குமிடமே ஆலயமாகும். இத்தகைய சிறப்புப் பெற்ற ஆலயங்கள் கலைகளின் வளர்ச்சியில் முக்கிய இடம் வகிக்கின்றது. அந்தவகையில் இசைக்கலை வளர்ச்சியில் இந்து ஆலயங்கள் சிறப்புப் பெறுகின்றன. பல்வேறு கோணங்களில் இசைக்கலையானது ஆலயங்களினூடாகவே வளர்ச்சிபெற்றன. இசை வடிவங்களைச் சிற்பங்களாக ஓவியங்களாக உருவாக்குதல், இசைத்தூண்கள், இசைக் கல்வெட்டுக்கள், ஆலயங்களில் தேவரடியார்களை நியமித்து அவர்களுக்கான மானியங்களை வழங்குதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றிற்கான பெருமையும் சிறப்பும் பண்டைய காலத்தில் வாழ்ந்த மன்னர்களையே சாரும். பண்டைய ஆலயச் சின்னங்களும் சான்றுகளுமே தற்காலம் வரை எமது இந்து கலாசார விழுமியங்களையும் தமிழர் கலாசாரங்களையும் உலகமறியச் செய்கின்றன. அத்துடன் எமது முன்னோர்களில் அறிவியல் சார்ந்த விடயங்களை சிலர் மூட நம்பிக்கை என்று கூறுகின்ற பொழுதிலும், உலக ஆய்வாளர்கள் அவர்களின் அறிவாற்றலைக் கண்டுவியக்கின்றனர். அந்தவகையில் இந்து ஆலயக்கட்டுமானங்களில் இசைசார் பின்னணிகள் புராதன காலத்தில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்தியது மற்றும் தற்காலத்தில் எவ்வாறு செல்லாக்குச் செலுத்துகின்றது. அவற்றில் உள்ள இடர்பாடுகளை ஆராய்தலே இந்த ஆய்வின் நோக்கமாக உள்ளது. இந்த ஆய்வின் ஒரு பகுதியாக ஈழத்தில் அமைந்த இந்து ஆலயக்கட்டுமானங்கள் பற்றியும் தரவுகள் சேகரிக்கபட்டு ஆராயப்பட்டுள்ளது. ஈழத்தில் தற்காலத்தில் புதிதாக எழுகின்ற ஆலயங்கள், அவற்றின் கடடு மானங்களில் பாரம்பரிய இசைப் புலமைத்துவங்கள் எவ்வாறு அமைக்கப்படுகின்றன. பாரம்பரிய மரபுசார் முறைகளைப் பாதுகாப்பதில் எவ்வாறான பிரச்சனைகள் உள்ளன? அதற்கான தீர்வுகளை நாம் எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம் என்பது பற்றி இந்த ஆய்வில் ஆராயப்படுகின்றது.*

**திறவுச்சொற்கள்:** இசைக்கலை, ஆலயங்கள், கட்டுமானங்கள், இசைத்தூண்கள், கல்வெட்டுக்கள், சிற்ப ஓவியங்கள்.

[1] *இசைத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
*smathurangky@univ.jfn.ac.lk*

## அறிமுகம்

வழிபாட்டு மரபுகளில் இசைக்கலைக்கான உறவினைப் பிரித்துப் பார்ப்பது மிகக் கடினம். அனைத்து வழிபாட்டு முறைகளுக்கும், வழிபாட்டுத் தலங்களுக்கும், இசைக்குமான புரிந்துணர்வு என்பது மிக முக்கியமானதொன்றாகும். இறைவனோடு மனம் ஒன்றுபட்டு இறைவனே மெய்ப்பொருள் என்றுணர்ந்து இறைவனுடன் ஒன்றறக் கலக்குமிடமே ஆலயமாகும். இத்தகைய சிறப்புப் பெற்ற ஆலயங்கள் கலைகளின் வளர்ச்சியில் முக்கிய இடம் வகிக்கின்றன. ஆய கலைகளுள் பெரும்பான்மையான கலைகளின் வளர்ச்சியில் இந்து ஆலயங்கள் முக்கியபங்கு வகிக்கின்றன. அந்தவகையில் இசைக்கலை வளர்ச்சியில் இந்து ஆலயங்கள் சிறப்புப் பெறுகின்றன. பல்வேறு கோணங்களில் இசைக்கலையானது ஆலயங்களினூடாக வளர்ச்சிபெற்றன. இசை அர்ச்சனை, இசை வடிவங்களை உருவாக்குதல், இசைத்தூண்கள், இசைக்கல்வெட்டுக்கள், இசைச்சிற்பங்களை உருவாக்குதல் போன்ற துறைகளில் வளர்ச்சி கண்டன. அதனைச் சிறப்புற வளர்த்த பெருமை பண்டைய மன்னர்களையே சாரும். அந்தவகையில் இந்த ஆய்வுக் கட்டுரையானது இந்து ஆலயங்களில் காணப்படும் இசைத்தூண்கள், கல்வெட்டுக்கள் புராதன காலத்திலும் தற்காலத்திலும் எவ்வாறு அமைந்துள்ளது பற்றி ஆராயப்பட்டுள்ளது.

## தென்னிந்தியக் கட்டுமானங்களில் இசைசார் பின்னணி

முருகப் பெருமானின் சீடர்களான சித்தர்கள் வகுத்த ஆயகலைகளுள் கட்டடக்கலை மற்றும் இசைக் கலையானது ஆலயம் வாயிலாக அதன் உச்சத்தை அடைந்துள்ளது என்றே கூறலாம். தமிழ்நாட்டு வரலாற்றில் பல்லவர், சோழர், முத்தரையர், நாயக்கர் போன்ற மன்னர்கள் தங்களுக்கென்று சிறப்பான கட்டடக் கலைத்திறனையும், சிற்பத்திறனையும் பெற்று பல அழியாத கலைப்பொருட்களைப் படைத்திருக்கின்றார்கள். பண்டைய கால ஆலயங்கள் பெரும்பாலானவை கருங்கற்களினாலேயே கட்டப்பட்டன. புராதன ஆலயங்களின் கட்டமைப்புக்கள் சிறப்புப் பெறுவதற்கு முக்கியமானதொரு காரணமாக இந்தக் கருங்கற்கள் அமைகின்றன.

## இசைத்தூண்கள்

உலக அதிசயப்பட்டியலில் இடம்பெறாத தமிழர்களின் கட்டடக்கலை மற்றும் பொறியியல் அதிசயமாக இசைத்தூண்கள் அமைந்துள்ளன. கலைஞனின் கரங்களும் கற்பனைத்திறனும் எவ்வாறெல்லாம் சாதிக்க முடிகின்றது என்பதனைப் பார்க்கும் போது வியப்புமிக்கவையாக உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள சில கோவில்களில் காணப்படும் இசைத்தூண்களைப் பார்க்கும் போது ஆச்சர்யத்தினுள் எம்மைக் கொண்டு செல்கின்றது. இன்று இசைத்தூண்கள் என்று நாம் குறிப்பிடுபவை அவை தோன்றிய காலத்தில் என்ன பெயர் பெற்றிருந்தன என்பதனை அறிய முடியவில்லை.

இந்த இசைத் தூண்களானவை ஒரு நீளமான பாறையை வெட்டி எடுத்து, அதிலிருந்து ஏழு தனித்தனிச் சிறிய தூண்களாக வடித்துள்ளனர். இவ்வாறாக ஆலயங்களில்

அமைக்கப்பட்ட ஒவ்வொரு சிறிய தூண்களைத் தட்டினால் சப்தஸ்வரங்களான ''ஸ,ரி,க,ம,த,நி,ஸ'' என்ற தனித்தனி ஸ்வரங்களைக் கேட்கமுடிகின்றது. சில பெரிய தூண்களைச் சுற்றி அமைந்துள்ள சிறிய தூண்களில் ஐம்பத்து மூன்று தனித்தனி இராகங்களை உணரமுடியும் என அறியமுடிகிறது. இதில் பெரிய தூண்களில் கர்நாடக சங்கீதமும் சிறிய தூண்களில் மிருதங்கம், கடம், சலங்கை, வீணை, மணி போன்ற இசைக்கருவிகளின் ஓசையையும் கேட்க முடிகின்றது. அப்படியானால் ஒவ்வொரு கல்லையும் ஒவ்வொரு பதத்திற்கு இழைத்திருந்தால் தான் இவ்வாறு வேறு வேறு ஒலிகளில் ஒலிக்க முடியும். இதனைத் தட்டுவதனால் எமது விரல்களுக்கு எந்த வலியும் ஏற்படுவதில்லை. உண்மையான இசை ஞானமுடையவர்கள் இதனைத் தட்டினால் இசைக்கருவியில் இருந்து வரும் இசையைவிட மிகத்துல்லியமான இசையை உணரமுடியும்.

**இசைத்தூண்களின் பயன்பாடு**

பண்டைய காலத்தில் இருந்த இசைக்கலைஞர்கள் கோயில் விழாக்களின் போது, ஒரு இசைக்கருவியைக் கூட பயன்படுத்தாமல் இந்த இசைத் தூண்களை வைத்தே இசைத்துள்ளனர். அதாவது ஆலய வழிபாட்டின் பொழுது மற்றும் விழாக்காலங்களில் தேவார இசை ஆராதனைகள் இடம்பெறும் பொழுது இசைத்தூண்களைத் தட்டி இசைக்கருவிகளாகப் பயன்படுத்தியுள்ளமையினை நூல்கள் வாயிலாக அறிய முடிகின்றது. இத்தகைய முறையானது உலகத்தில் எந்த இடத்திலும் இல்லை என்பது நமக்கு இன்னும் சிறப்பினைச் சேர்க்கின்றது.

**தென்னிந்தியாவில் இசைத்தூண்கள் பிரசித்தி பெற்ற ஆலயங்கள்**

இசைத்தூண்கள் பிரசித்தி பெற்ற தலங்கள் தென்னிந்தியாவிலே அதிகளவில் அமைக்கப்பட்டுள்ளன. மதுரை மீனாட்சி அம்மன், அழகர் கோவில், சுசீந்திரம் கோவில், திருப்பதி, திண்டுக்கல், திருநெல்வேலி, ஆழ்வார் திருநகரி, திருவனந்தபுரம் ஆகிய ஆலயங்களில் இசைத்தூண்கள் நிறுவப்பட்டுள்ளது. இன்று மிகவும் பிரசித்தி பெற்றிருப்பவை மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் உள்ள இசைத்தூண்கள். இவை கோயிலின் வடக்கு அடி வீதி மண்டபத்தில் கீழிருந்து உச்சிவரை ஒரே தூணாக நிறுவப்பட்டு அவற்றில் ஒவ்வொன்றிலும் பன்னிரு பாகங்களாக உள்ள ஒற்றைத் தூண்களாக நான்கு தூண்கள் காணப்படுகின்றன. இத்தூண்களை மிகப்பெரிய பாறையைக் கோயிலுக்கு எடுத்து வந்து சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைத்துள்ளனர். இடைப்பாகத்தை மட்டும் சிறப்பான முறையில் நிலையான சட்டங்களாக ஜன்னல் கம்பி போல நிறுத்தியிருக்கிறார்கள். இவை பன்னிரு சட்டங்களாக அமைந்தள்ளன. இவற்றைத் தட்டும் போது நவரோஜ் மற்றும் குறிஞ்சி ராக ஸ்வரங்கள் கேட்கக்கூடியதாக உள்ளது என இசைவாணர்கள் கூறுகின்றனர். இதே ஆலயத்தில் மீனாட்சி திருமணம் நடைபெறும் ஆயிரங்கால் மண்டபத்திலே இரண்டு பெரிய தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றிலும் 22 இசைத்தூண்கள் காணப்படுகின்றன. இவை 22 ஸ்ருதிக்காக உருவாக்கப்பட்டவை என்ற தகவலும் இங்கு உருவாகின்றது. இந்த இசைத்தூண்களுக்கு அருகில் பெரிய பரந்துபட்ட வெளி ஒன்று

காணப்படுகின்றது. இவ்வெளிகளில் ஆடல், பாடல் நடைபெறும் பொழுது இந்த இசைத்தூண்கள் தாளமாகவும் பண்ணாகவும் இசைக்கப்பட்டன எனச் சொல்லப்படுகின்றது. மதுரை மீனாட்சி அம்மன் ஆலய இசைத்தூண்கள் இன்று அவற்றிற்கு முட்கம்பிகள் இட்டுச் சுற்றிக் கட்டிப் பாதுகாக்கப்படுகின்றது.

திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில் அர்த்த மண்டபத்தின் எதிரிலுள்ள மணி மண்டபத்தில் இசைத்தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை பல சட்டங்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. அவை சதுரம், வட்டம், முட்டை வடிவம், நீண்ட சதுரம், எண்கோணம், பல கோணம், திருகு முதலான அமைப்புக்களில் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு சதுரச்சட்டத்தில் பஞ்சம ஸ்வரமும், எண்கோணச் சட்டத்தில் மத்திம ஸ்வரமும் ஒலிக்கின்றன. இதனை ஆராய்ந்த ஆய்வாளர்கள் நவரோஸ், சங்கராபரணம், குறிஞ்சி ஆகிய இராகங்களின் ஸ்வரங்கள் ஒலிப்பதாகக் கூறுகின்றனர். சட்டங்கள் அனைத்தும் அரிய வேலைப்பாடும் பள பளப்பும் கொண்டவையாக அமைக்கப்பட்டுள்ளன.

சுசீந்திரம் கயிலாயநாதர் கோயில் மிகப் புராதனமானது. இங்கு பழமையான நான்கு மண்டபங்கள் உள்ளன. இவற்றுள் அலங்கார மண்டபத்துள் இசைத்தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆழ்வார் திருநகரிக்கருகே உள்ள சண்பகராம நல்லூர்க் கோயிலில் மத்தியில் உள்ள ஒரு தூண் குழல் வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. அதன் மையத்தில் ஓரடி நீளமுள்ள ஒரு துவாரம் படுக்கை வாட்டில் செய்யப்பட்டுள்ளது. இதன் ஒரு புறத்தினைத் தட்டும்பொழுது பெருத்த ஒலியும் மறு புறத்தைத் தட்டும்போது சன்ன ஒலியும் ஒரே ஸ்ருதியில் ஒலிக்கின்றது. இங்கு கூறப்பட்ட கோயில்களில் உள்ள இசைத்தூண்கள் மனிதனுடைய அழிவுக் காலங்களிலும் கூட முற்றாக அழியாமல், வெயில், காற்று, ஈரம் ஆகியவற்றாலும் சேதமாகாமல் இன்றும் நிலைத்து நிற்பது பேரற்புதமாகும். ஆனால் தற்காலத்தில் இத்தகைய சிறப்புக்களுடன் கூடிய இசைத்தூண்கள் ஆலயச் சூழலில் அமைக்கப்படுகின்றதா? என்பது ஒரு கேள்விக்குறியாக உள்ளது. எந்தவொரு தொழில்நுட்ப யுக்திகளும் இல்லாத காலத்தில் நம் முன்னோர்களால் அமைக்கப்பட்ட படைப்புக்களில் அவர்களின் வீரத்தினையும், பல மடங்கு பொருந்திய பலத்தினையும் காணக்கூடியதாக உள்ளது.

காவிரிக் கரையே விஜயநகர மன்னர்களின் பிரதான தளமாகக் காணப்பட்டது. இங்கு இவர்கள் பல கட்டட வளங்களை வளப்படுத்திச் சென்றுள்ளனர். இதற்கு இங்குள்ள கோயில்களே சான்றாகும். துருக்கியரை ஒட்டி மீண்டும் இந்து மதத்தை நிலை நாட்டிச் சமூகத்தில் ஒரு பேரெழுச்சியைத் தோற்றுவித்ததென்றே கூறலாம். கோயில்கள் இதன் பிரதி பலிப்பே. சிற்பிகள் தங்களையும் மிஞ்சிய தெய்வ ஆற்றலைக் கல்லில் காட்ட நிறுவப்பட்டதே இந்த இசைத்தூண்களாகும்.

**கல்வெட்டுக்களும் சிற்பங்களும்**

கல்வெட்டுக்களில் மிகவும் பிரசித்தி பெற்றது குடுமியான் மலைக் கோயிலாகும். புதுக்கோட்டையிலிருந்து பன்னிரண்டு மைல் தொலைவில் உள்ள ஒரு சிறிய ஊர் குடுமியான் மலையாகும். இந்த மலை உச்சியில் முருகன் ஆலயமும், அடிவாரத்தில் சிவாலயமும், இடையில் அம்பிகை அகிலாண்டேஸ்வரி ஆலயமும் அமைந்துள்ளன. மேலைக் கோயில் என அழைக்கப்படும் ஒரு குகைக் கோயில் ஒன்றும் இங்கு உள்ளது. இதன் பின்புறத்தில் இரண்டு விநாயகர் சிற்பங்கள் உண்டு. அதற்கிடையே ஒரு பாறை மீது ஓர் இசைக்கல்வெட்டும் அமைக்கப்பட்டுள்ளது. குடுமியான் மலையில் நூற்று இருபது கல்வெட்டுகளுக்கு மேல் இருப்பினும், இவ்விசைக் கல்வெட்டு ஒன்று மட்டுமே பல ஆராய்ச்சிகளுக்கு உட்படுத்தப்பட்டது. இந்தக் கல்வெட்டானது இசையிலும் ஓவியத்திலும் வல்லமைமிக்க பல்லவ மன்னன் மகேந்திரவா்மன் காலத்தில் வெட்டப்பட்டுள்ளது. புதுக்கோட்டைக்குச் சமீபத்தில் **திருமெய்யம்** என்னும் சிவன் கோயிலிலும் இசைக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

**"குணசேன பிரமாணஞ் செய்த**
**வித்யா பரிவாதினி கற்க"** (அருணாச்சலம்,மு.,2009:256)

இங்கு கூறப்பட்டுள்ள கல்வெட்டானது "சித்தம் நமச்சிவாய" என்று சிவப் பஞ்சாட்சரத்தோடு ஆரம்பமாகின்றது. இது கல்வெட்டுக்களில் பதிக்கப்படும் சிவ வணக்கமாகும். அதனைத் தொடர்ந்து 7 பிரிவுகளாகக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றது. அவற்றிற்கு 7 தலைப்புக்களும் வழங்கப்பட்டுள்ளது. அவையாவன.

1. மத்ய க்ராமே சதுஸ் பிரஹார ஸ்வாராகம:
2. ஸட்ஜ க்ராமே சதுஸ் பிரஹார ஸ்வாராகம:
3. ஸாடவே சதுஸ் பிரஹார ஸ்வாராகம:
4. ஸாதாரிதே சதுஸ் பிரஹார ஸ்வாராகம:
5. பஞ்சாம சதுஸ் பிரஹார ஸ்வாராகம:
6. கைசிகி மத்யமே சதுஸ் பிரஹார ஸ்வாராகம:
7. கைசிகி சதுஸ் பிரஹார ஸ்வாராகம: (அருணாச்சலம்,மு.,2009:257)

இவற்றில் முதல் இரண்டும் மத்யம க்ராம, ஸட்ஜ க்ராம இசைத் தொகுப்பினைக் குறிக்கின்றது. இசைத்தொகுப்புக்கள் ஸட்ஜக்ராமம், மத்யக்ராமம், காந்தாரக்ராமம் என்ற மூன்று வகையாகச் சொல்லப்படும். ஏனைய ஐந்து வரிகளில் மூன்றாவதாகிய சாடவம் என்பது 6 ஸ்வரங்களை உடைய பண் அல்லது இராகத்தினைக் குறிக்கின்றது. ஸாதாரிதம் என்பது தேவாரப் பண்ணாகிய ஸாதாரியைக் குறிக்கின்றது. கல்வெட்டின் முடிவில் பின்வரும் தொடர் காணப்படுகின்றது.

"……..ட்டிற்கு
…….ழிற்கும் இவை உரிய" (அருணாச்சலம்,மு.,2009:258)

இவ்வரிகளில் கருத்து வேறுபாடு நிலை அடைந்து, இரண்டு விதமான பொருள்களை உணர்த்தி நிற்கின்றது. சிலர் அதனை எட்டிற்கும் ஏழிற்கும் உரியது எனக் கொண்டு எட்டு, ஏழு என்பதற்கு பின்வருமாறு பொருள் கூறப்படுகின்றது. எட்டு, ஏழு தந்திகளையுடைய வீணையில் இசையை இசைக்கலாம் என்ற கருத்து முன் வைக்கப்படுன்றது. மற்றொரு கருத்தாக பாட்டிற்கும், யாழிற்கும் உரியது என்று பா, யா என்ற இரு எழுத்துக்களைக் கூறி இதன் பொருளாக இங்கு சுர வரிசைகள் வாய்ப்பாட்டில் பாடுவதற்கும் யாழ்க்கருவியில் வாசிப்பதற்கும் தகுதி உடையவையாக கொள்ளப்படுகின்றது.

அந்தவகையில் குடுமியான் மலைக் கல்வெட்டானது நமக்கு ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்துகின்றது. அக்கால மன்னனாகிய மகேந்திர வர்மன் இந்த இசைக் கல்வெட்டுக்களை நிலை நிறுத்த கல்வெட்டுக்களை வட மொழியிலும் தமிழ் மொழியிலும் அமைத்தான். இக்கால கட்டத்தில் அதிகளவிலான தேவாரப் பதிகங்கள், பாசுரங்கள் தோற்றம் பெற்றன. பண்ணிற்கான நிரந்தர இடத்தைக் கொடுக்க வேண்டும் என்று எண்ணி வெட்டப்பட்டதே குடுமியான் மலைக் கல்வெட்டாகும்.

குகைக் கோயிலின் தென் பகுதியில்தான் கர்நாடக சங்கீத விதிகள் குறித்த புகழ் வாய்ந்த கல்வெட்டு இருக்கிறது. இசையைப் பற்றியும் அதன் அடிப்படை இராகங்களைப் பற்றியும் பாலி கிரந்த எழுத்தில் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளது. இந்த இசைக் குறிப்புக்களைக் கொண்டே அந்தக்காலத்தில் சங்கீதம் பயில்பவர்கள் இராகங்களைப் பற்றி அறிந்திருந்தனர். குடுமியான் மலையைச் சுற்றி ஏராளமான கல்வெட்டுக்களை நாம் பார்க்கலாம். இவை வரலாற்று ஆச்சரியங்களை உடையதாகக் கணப்படுகின்றது. இதன் சிறப்பினைத் தற்காலத்திலும் வெளிநாட்டவர்கள் வந்து ஆய்வு செய்த வண்ணம் உள்ளனர்.

சிதம்பரம் நடராசர் கோயிலின் பின்பக்கம் உள்ள பிரகாரத்தில் புடைப்புச் சிற்பங்களில் நாகசுரம் இசைக்கும் சிற்பம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மைசூர் அருகே அர்க்கேசுவரர் கோயிலின் வாயிலில் நாகஸ்வரம் இசைத்தலும் சாரங்கி இசைத்தலும் புடைப்புச் சிற்பங்களாகக் காணப்படுகின்றன. தஞ்சைப் பெருங்கோயிலில் நாகஸ்வரம் இசைப்பவர்களுக்கான நிவந்தங்கள் மற்றும் ஏனைய வாத்தியங்கள் இசைப்பதற்கான நிவந்தங்களும் கல்வெட்டுக்காளாகப் பொறிக்கப்பட்டுள்ளன.

ஆந்திராவில் தலாபுரம் என்னும் இடிந்த கோயிலின் தூணில் இரண்டு புறங்களிலும் நாகஸ்வரம் வாசிப்பவர்களுக்கான நிவந்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் பெரும்பாலும் தென்னிந்திய ஆலயங்களில் பண்டைய மரபு ரீதியான மங்கள இசை வாசிப்பு முறைகள், இசைக்கருவிகள் வாசிக்கும் முறைகள், ஒதுவார் மூர்த்திகளுக்கான நிவந்தங்கள்,

நடன நாட்டிய நிவந்தங்கள் போன்றன இசைத் தூண்களாகவும் கல்வெட்டுக்களாகவும், சிற்பங்களாகவும் புனரமைக்கப்பட்டன. இவை இற்றைவரை தென்னிந்தியாவில் பாதுகாக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எமது பாரம்பரிய பண்பாட்டினைச் சிறப்பெய்தச் செய்தவையே இவையெனலாம்.

## ஈழத்து ஆலயக்கட்டுமானங்களில் இசை சார் பின்னணிகள்

தென்னிந்தியாவைப் போன்று ஈழத்திலும் பல ஆலயங்கள் மன்னர்களினால் அமைக்கப்பட்ட பொழுதும் இவ்வாலங்களில் பெரும்பாலானவை வெள்ளையர்களால் இடிக்கப்பட்டு, கல்வெட்டுக்கள் சிதைக்கப்பட்டன. மீண்டும் அவ்வாலயங்கள் தற்பொழுது புனர்நிர்மாணம் செய்யப்பட்டுக் காணப்படுகின்றது. ஈழத்தில் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்ட போதும் ஆலயங்களில் இசை சார்ந்த கல்வெட்டுகள் எவையும் பொறிக்கப்படவில்லை என்றே கூறலாம். மாறாக இசை சார்ந்த சிற்பங்கள் ஓவியங்கள் சில ஆலயங்களில் பாதுகாக்கப்படுகின்றன. கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம், காரைநகர் சிவன்கோயில், பொன்னம்பலவாணேச்சரம், தச்சன்தோப்பு சிந்தாமணி விநாயகர், கிராய் பிள்ளையார் கோயில் போன்ற ஆலயங்களில் இசைச்சிற்பங்கள் தூண்களிலும் ஆலய சூழலிலும் அமைக்கப் பட்டுள்ளன.

## ஈழத்தில் தற்கால ஆலயக் கட்டுமாணங்களில் இசை சார் பின்னணிகள்

ஆலயங்களின் செழிப்புற்ற காலமாக நாம் அறிவது நமது பண்டைய காலமாகும். நமது முன்னோர்களின் கலை சார் எண்ணங்களையும் வண்ணங்களையும் சிறப்பித்துக் காட்டுவது நமது ஆலயங்களாகும். ஆலயக் கட்டுமானப் பணிகளின் வாயிலாகவே அவர்கள் வெளிப்படுத்திய திறனை உலக ஆய்வாளர்களே வியந்து பார்த்தனர். எந்தவொரு வசதிகளுமற்ற காலப்பகுதியில் நம் முன்னோர்கள் அக்காலத்து மன்னர்களினுடைய ஆதரவுடன் ஆலயங்களைச் சிறப்புற வடிவமைத்திருந்தனர். அவர்களின் அயராத உழைப்பினால் பிரமாண்டமாகக் கட்டியெழுப்பப்பட்ட ஆலயங்கள் என்றுமே காலத்தால் அழியாச் சொத்துக்களாக இந்துக்கள் பேணப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அதேநேரம் ஈழத்தில் தற்காலத்தில் நிர்மானிக்கப்படுகின்ற ஆலயங்கள் இத்தகைய சிறப்பினைப் பெறுமா? அல்லது எமது எதிர்கால சந்ததியினருக்கு எமது ஆலயங்களின் தனித்துவத்தைக் கொண்டு செல்ல முடியுமா என்பது கவலையைத் தருகின்றது.

ஈழத்தில் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் பழமையான பல ஆலயங்களைப் பாதுகாக்க வேண்டிய தேவை எம் அனைவருக்கும் உண்டு. தென்னிந்தியாவில் புதிய ஆலயங்களின் தோற்றம் என்பது மிகவும் குறைவு. மாறாக ஈழத்தில் தற்காலத்தில் புதிய புதிய ஆலயங்கள் உருவாக்கம் பெறுகின்றன. இவற்றுள் ஓரிரு ஆலயங்களைத் தவிர ஏனையவை சாதாரண சீமெந்துக் கட்டுமானங்களிலேயே அமைக்கப்படுகின்றன. இவ்வாறு

தோற்றம் பெறுகின்ற ஆலயங்கள் சில குடும்பத்துக்கான ஆலயங்களாகவும் சாதிய அடிப்படையினதாகவும் தோற்றம் பெறுகின்றன. இது தவிர ஆலயங்களுக்கு இடையிலான போட்டிகள் நிலவுகின்றன. ஓர் ஆலயம் புனநிர்மாணம் செய்யப்படுகின்ற பொழுது அருகிலுள்ள இன்னோர் ஆலயம் அதற்கு நிகராகப் புனநிர்மானம் செய்ய முன்நிற்கின்றது. இவ்வாறான சூழலும் இங்கு நிலவுகின்ற அதே நேரம் இவை ஏதோ ஒரு வகையில் எமது மதத்தினையும் பண்பாட்டு விழுமியங்களையும் பாதுகாப்பதாகவும் எடுத்துக்கொள்ள முடிகிறது. அண்மையில் இணுவிலில் அமைக்கப்பட்ட ஞானலிங்கேசுரர் ஆலயம் பழமையைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கில் கருங்கல்லினால் அமைக்கப்பட்டுள்ள ஆலயமாகும். இந்த ஆலயத்தில் கருங்கல்லால் செதுக்கப்பட்ட லிங்கம் ஒன்று உள்ளது. அதன் அடிப்பாகத்தில் பத்துத் தலைகொண்ட இராவணன் சாமகானம் இசைக்கும் உருவம் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதே போன்று பொலிகண்டியில் தற்பொழுது கந்தவனக் கடவை என்னும் முருகன் ஆலயமும் கருங்கல்லினால் புணருத்தாரணம் செய்யப்படுகின்றது.

## தற்கால ஆலயப் புனருத்தாரணத்தில் பழமையான பல விடயங்கள் உள்ளடக்கப்படாமைக்கான காரணங்கள்

எந்தவொரு வசதியுமற்ற காலத்தில் நம் முன்னோர்களால் தொன்மை மிகுந்த ஆலயங்களை உருவாக்க முடிந்தது என்றால் ஏன் தற்காலத்தில் அவ்வாறான சிறப்பான ஆலயங்களை நிர்மானிக்க முடியவில்லை. ஆலயங்களில் புராண, இதிகாசம் சார்ந்த படைப்புக்களையோ இசை சார்ந்த, நடனம் சார்ந்த படைப்புக்களையோ தூண்களாகவோ, சிற்பங்களாகவோ, கல்வெட்டுக்களாவோ, குறியீடுகளாகவோ பதிப்பதில்லை. ஆலயத்திற்கும், அதனைச் சூழவுள்ள பகுதிகளையும் ஒரு வர்ணக்கலைக்குள் மட்டுமே இன்றைய சமூகத்தினர் உட்படுத்துகின்றனர். அதே நேரம் பண்டைய ஆலயங்களின் சிறப்பினையும், இசை சார்ந்த ஆலயச் சூழலையும் நாம் இன்று அறிந்து கொண்டோம். அவ்வாலயங்களின் சிறப்பினை எமது எதிர்கால சந்ததியினரும் அறிந்து கொள்ளக்கூடிய சிறப்பான கலை சார்ந்த கட்டுமானம் அவ்வாலயங்களில் சிறப்புப் பெறுகின்றது. ஆனால் தற்காலத்தில் உருவாக்கம் பெறும் ஆலயங்கள் கலை சார்ந்த வடிவங்களுடன் அமைக்கப்படும் தன்மை குறைவென்றே கூறலாம். தற்பொழுது கட்டப்படுகின்ற ஆலயங்கள் குறித்த காலப்பகுதியிலேயே பல முறை புனர்நிர்மாணம் செய்யப்படுகின்றது. ஆலயங்களின் வடிவங்களில், அமைப்புக்களில் மாற்றம் ஏற்படுகின்றது. இதனால் எமது இந்து ஆலயங்களின் தனித்துவம் மாற்றம் பெறுகின்றது என்றே கூறலாம். புராதன ஆலயங்களில் அமைக்கப்பட்ட கலை மற்றும் இசைசார் வடிவங்களை தற்கால ஆலயங்களில் கொண்டு வருவதில் உள்ள இடர்பாடுகளையும் அதற்கான காரணங்களைப் பார்த்தோமேயானால்,

- பொருளாதார வசதியின்மை.
- பண்டைய காலத்தில் பெருமளவிலான நிலப்பரப்புக்கள் மன்னர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு ஆலயங்கள் அமைக்கப்பட்டன.

- பண்டைய காலத்தில் நம் முன்னோர்கள் அனைத்துக் கலைகளிலும் சிறப்புப் பெற்றவர்களாக விளங்கினர்.
- மன்னர்களின் ஆதரவு இருந்தாலும் கூட கலை விற்பன்னர்களே பண்டைய ஆலயங்கள் சிறப்புப் பெறக் காரணமாக இருந்தனர்.
- தற்காலத்தில் ஆலயக் கட்டுமாணப்பணிகளை மேற்கொள்ளும் சிற்பிகள் கலைஞர்கள் இன்மை.
- கட்டடக் கலைஞர்களை தென்னிந்தியாவில் இருந்து அழைத்து வரவேண்டியுள்ளமை.
- அவர்களிற்கான பெரிய அளவிலான ஊதியங்கள் வழங்கவேண்டியுள்ளமை.
- நாட்டின் போர்ச்சூழலினால் ஏற்பட்ட அவல நிலையில் மக்கள் இறைத் தன்மையை இழந்தமை.
- பண்டைய காலத்தில் அவர்களுக்கான, உணவு, உடை, தங்குமிடம், ஊதியம் போன்றவற்றை போதுமான அளவு மன்னர்கள் வழங்கியமை. இன்றைய காலகட்டத்தில் அன்றாட வாழ்வாதாரத்திற்கே கஸ்ரப்படுகின்ற நிலை.
- தற்கால இளைஞர்கள் ஆன்மீகத்தை இறை பக்தியை உணராமை.
- புராதன காலத்தில் கருங்கற்களாலேயே ஆலயங்கள் கட்டப்பட்டன. ஆனால் தற்காலத்தில் ஒரு ஆலயத்தைக் கருங்கல்லால் கட்டுவதற்கு பெருந்தொகையிலான பணத்தேவை ஏற்படுகின்றது.
- நவீன தொழில் நுட்ப வளர்ச்சியின் காரணமாக தற்காலத்தவர்கள் ஆலயங்களையும் அதற்கேற்ப நவநாகரீக முறையில் அமைக்க எத்தனிக்கின்றமை.
- தற்கால இளைஞர்கள் இன்று தமது வாழ்க்கை முறைகளையே மேல்நாட்டவர் போன்று மாற்றம் செய்து வருகின்றனர். குறிப்பாக உணவுப்பழக்க வழக்கங்கள் ஆகட்டும், கலை சார்ந்த ஈடுபாடுகள் ஆகட்டும் அவர்களை முற்றும் முழுதாக மாற்றி வருகின்றது.
- சாதிய ரீதியான புறக்கணிப்புக்களும் திட்டமிடப்பட்ட மதமாற்றங்களும்.
- ஆலயம் சார்ந்த தொன்மைகளை அறியாத ஆலய நிர்வாகங்கள்.
- ஈழத்தில் பெரும்பாலான ஆலயங்கள் தனியார் ஆலயங்களாகவே காணப்படுகின்றமை போன்ற காரணங்களைக் குறிப்பிடலாம்.

**முடிவுரை**

இந்துக்களின் இசைசார் கலை நுட்பங்களையும் அதன் முக்கியத்துவங்களையும் இன்று வரை அறியச் செய்வது ஆலயக் கட்டுமானங்களாகும். இங்குள்ள கல்வெட்டுக்களும், சிற்பங்களும், இசைத் தூண்களுமே அவையாகும். இசை சார்ந்த பல விடயங்களைக், குறிப்பாக வாத்தியக் கருவிகள், அவை ஆலயச் சூழலில் வாசிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள், கலைஞர்கள், அவர்களது பணிகள் ஆகியவை பற்றிய விளக்கங்கள் ஆலயக் கட்டுமானங்களில் பதிக்கப்பட்டுள்ளன. இவை நம் முன்னோர்கள் நமக்களித்த பெரும் சொத்தாகும். இவற்றைப் பாதுகாக்க வேண்டிய முழுப் பொறுப்பும் நமக்குள்ளது.

மூதாதையரின் சிறப்பு வாய்ந்த கலை நயத்தினாலேயே நாம் இன்று அக்காலக் கலைச்சிறப்பினை அறியக்கூடியதாக இருக்கின்றது. அது மட்டுமன்றி பண்டைய ஆலயங்களின் கலை நயத்தினை எமக்கடுத்த சந்ததியினரும் அறியக் கூடிய விதத்தில் பலம்மிக்கதாகவும் ஆச்சர்யமிக்கதாகவும் அமைந்துள்ளனர். ஆனால் தற்காலத்தில் அமைக்கப்படுகின்ற சில ஆலயங்களின் தனித்துவத்தைத் தற்காலத்தவர்களின் காலத்தில் மட்டுமே அறிக்கூடிய நிலை காணப்படுகின்றது. எம்மைத் தொடர்ந்து வருகின்ற சந்ததியினர் அதனை அறிந்து கொள்வார்களா? என்பது கேள்விக்குறியாகின்றது. தற்காலத்தில் புதிதாகக் கட்டப்படுகின்ற, புனர்நிர்மாணம் செய்கின்ற ஆலயங்களில் ஆலயத்துடன் தொடர்புடைய நிறங்களை வர்ணங்களாகவும், கலை வடிவங்களைச் சிற்பங்களாகவும் செதுக்கி அதன் உருவாக்கத்திற்கான கல்வெட்டுக்களைப் பதித்தல் வேண்டும். இவை நீண்ட காலம் அந்த ஆலயம் சார் விடயங்களைப் பாதுகாக்க உதவும் என்பதில் ஐயமில்லை. அதே நேரம் ஒரு சில வெளிநாட்டவர்கள் சிலர் நமது பழமையினையும், மரபினையும், கலை கலாசாரங்களையும் பாதுகாப்பவர்களாகவும் இருக்கின்றனர். அதன் பிரதிபலிப்பாக இணுவிலில் அமைக்கப்பட்ட ஞானலிங்கேஸ்வரர் ஆலயத்தைக் குறிப்பிடலாம். இவ்வாலயத்தில் மிகப் பெரிய விக்கிரகங்கள் கருங்கல்லால் கட்டப்பட்டு தமிழில் பூசை வழிபாடு இசை ஆராதனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அதே போன்று பொலிகண்டியில் அமைந்துள்ள கந்தவனக் கடவை என்னும் ஆலயம் தற்பொழுது கருங்கல்லால் புனருத்தாரணம் செய்யப்பட்டு வருகின்றமை சிறப்பாகும்.

தென்னிந்தியாவில் ஆலயக்கலை வளச்சியில் பெரும் பங்காளர்களாக இருப்பவர்கள் ஆலய ஆதீனக் கர்த்தாக்களும், ஆலய மடாலயங்களுமாகும். ஆகவே ஈழத்து ஆலயங்களிலும் அதன் கலை வளர்ச்சியிலும் முன்னேறிச் செல்வதற்கு சிறந்த ஆதீனங்கள் உருவாக்கப்பட வேண்டும், சிறந்த நிர்வாகங்களும் சிறந்த தலைவர்களையும் நியமிக்க வேண்டும். பண்டைய மரபுசார் கலை கலாசாரங்கள் ஆலயங்களில் நிரந்தர சிற்பங்களாகவும், தூண்களாகவும், கல்வெட்டுக்களாகவும் பதிக்கப்பட வேண்டும். இவ்வாறான ஒரு மரபு சார் வளர்ச்சியினை நாம் மேற்கொண்டால் பல நூற்றாண்டுக் காலங்களுக்கு எமது இந்து சமய கலை மற்றும் இசைசார் விழுமியங்கள் பாதுகாக்கப்படும் என்பது இந்த ஆய்வின் முடிவுரையாகும்.

## உசாத்துணை


அருணாச்சலம்,மு., (2009), தமிழ் இசை இலக்கிய வரலாறு, கடவு பதிப்பகம், மதுரை.

பக்கிரிசாமிபாரதி.கே.ஏ., (2002), இந்திய இசைக் கருவூலம், முதற்பதிப்பு, ஸ்வராஜ் கிராபிக்ஸ், சென்னை.

சுந்தரம்,வீ.ப.கா., (1992), தமிழிசைக் கலைக் களஞ்சியம் தொகுதி-1, பாரதிதாசன் பல்கலைக்கழகம்.

மணிகண்டன்,மா., (2020), "திருக்கோயில்களும் இசைத்தூண்களும்", சமூக நல்லிணக்கத்திற்குத் திருக்கோயில்களின் பங்களிப்பு, அழகப்பா பல்கலைக்கழகம்.

பக்கிரிசாமிபாரதி,கே.ஏ., (2002), இந்திய இசைக்கருவூலம், சென்னை குசேலர் பதிப்பகம்.